பனிமயம்

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

ஜூன் 2023

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

இதோ, ஜூன் மாதம் பிறந்துவிட்டது. அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழாவுக்கான நாள்கள் நெருங்கி வருகின்றன. “**இதோ, நாள்கள் வருகின்றன,** என்கிறார் ஆண்டவர். அப்பொழுது இஸ்ரயேல் வீட்டாருக்கும் யூதா வீட்டாருக்கும் நான் கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றுவேன்” (எரே 33:14) என்ற ஆண்டவரின் வாக்கின்படி, இந்தப் பெருவிழா வழியாக ஆண்டவர் நிறைவான ஆசிகளை நம்மீது பொழியவிருக்கிறார்.

.பெருவிழா அண்மையில் வரவிருப்பதை அடுத்து, பெருவிழா ஆசிகளுக்காக ஒருங்கிணைந்து, உருக்கமாக மன்றாட ஐந்தடுக்குப் பரிந்துரை இறைவேண்டல் தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி கடந்த 14.04.2023 வெள்ளி அன்று தொடங்கிய **100 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு** 50 நாள்களைக் கடந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நான்காவது மற்றும் ஐந்தாவது அடுக்கு இறைவேண்டல் இம்மாதம் 24.06.2023 சனி அன்று தொடங்கவுள்ளது. தினமும் பேராலயத்தில் அரை மணி நேர நற்கருணை ஆராதனையும், நற்கருணைச் சிற்றாலயத்தில் பகல் 12.00 முதல் 03.00 வரை நோன்பு வேண்டலும் நடைபெறவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளுங்கள்.

“எதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம். ஆனால் நன்றியோடு கூடிய இறை வேண்டல், மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும் கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள்” (பிலி 4:6) என்னும் இறைமொழிக்கேற்ப நம்பிக்கையுடன் இறைவேண்டல் செய்வோம்.

வாருங்கள், ஒருங்கிணைந்து மன்றாடுவோம். பெருவிழா நாள்களை எண்ணற்ற ஆசிகளின் நாள்களாக மாற்றுவோம்!

என்றும் அன்புடன்,
அருள்பணி. குமார்ராஜா
பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 23 தாரகை 10

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

பனிமயம் விளம்பர விபரங்கள்

அரைப்பக்க விளம்பரம்	-	ரூ. 500/-
முழுப்பக்க விளம்பரம்	-	ரூ. 1000/-
பின் பக்க அட்டை உட்புற விளம்பரம்	-	ரூ. 1500/-
பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம்	-	ரூ. 2000/-

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

சித்திரவதை ஒழிப்புக்காக...

சித்திரவதை ஒழிப்பையும் அதனால் பாதிக்கப்பட்டோர்க்கும் அவர்களின் குடும்பங்களுக்குமான ஆதரவையும் உறுதி செய்யும் திடமான வழிக்கு பன்னாட்டுச் சமூகம் அர்ப்பணித்திட நாம் மன்றாடுவோம்.

உள்ளே...

தங்கத்தேர்ச் சிறப்பிதழ் 1

1. நம்பிக்கையாளர்களை ஒருங்கிணைக்கும் அன்னை மரியா 4
   ஆயர் செ. சூசைமாணிக்கம்
2. பனிமயத் தாயே! உம் நம்பிக்கை எமக்குத் தாயே!..........6
   அருள்முனைவர் ச.தே. செல்வராசு
3. அன்னையின் வழியில்... 8
   அருள்தந்தை லெரின் டிரோஸ்
4. மரியன்னையின் வழியில் மருத்துவப் பணி....................10
   அருள்சகோதரி மருத்துவர் கிரேஸ் மரியா
5. தங்கத் தேர் கவிதைகள் 12
6. மாதம் ஒரு மாதா படம் 13
7. பனிமய அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழா 2023 வினா - விடைப் போட்டி....................14
8. தங்கத் தேர் 2023 மைல் கற்கள் 16
9. திவ்விய சந்தமரிய தஸ்நேவிஸ் மாதா பேராலய பெருவிழா அறிக்கை....................18
10. விவிலியப் போட்டி 19
11. பனிமயப் பகிர்வு 22

நம்பிக்கையாளர்களை ஒருங்கிணைக்கும் அன்னை மரியா

"தங்கத் தாய்" எனப் போற்றப்பெறும் புனித தஸ்நேவிஸ் மாதாவுக்குத் "தங்கத் தேர்" எடுக்கும் பொன்னான வேளையில், "நம்பிக்கையாளர்களை ஒருங்கிணைக்கும் அன்னை மரியா" எனும் தலைப்பில் மூன்று சிந்தனைகளைச் சுருக்கமாக வழங்க விழைகிறேன்.

1. நம்பிக்கையின் அன்னை

நம் அன்னை மரியா இறை வார்த்தைக்குத் திறந்த மனத்துடன் செவிமடுத்து, இறைவனை முற்றிலும் நம்பினார்; தாம் கேட்ட வார்த்தையைத் தம் வாழ்க்கைச் சட்டமாகக் கொண்டு, அதைக் கடைப்பிடிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார் என்னும் உண்மையை லூக்கா நற்செய்தி சிறப்பாக எடுத்துரைக்கிறது.

வானதூதர் கபிரியேலின் வாழ்த்துரையைக் கேட்ட மரியா குழப்பமும் மனக் கலக்கமும் அடைந்ததில் வியப்பில்லை! விளக்கம் கேட்டு மரியா வினா எழுப்பிய வேளையில், "கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை" என்ற தெளிவைப் பெற்றார். எனவே, "நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று கூறி, தம்மை முற்றிலும் இறைவனுக்கு அர்ப்பணித்தார் (லூக் 1:26-38).

சுருங்கக் கூறின், ஒரு குழந்தைபோல் மரியா தம் இறைத் தந்தையைச் சார்ந்து வாழ்ந்தார்; அவருக்குக் கீழ்ப்படிந்து ஒழுகினார். இதுதான் உண்மையான, உறவு சார்ந்த நம்பிக்கை ஆகும்.

இதனால்தான் மரியா தம் உறவினரான எலிசபெத்தைச் சந்தித்த வேளையில், "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" என்று கூறி அந்த அம்மையார் மரியாவை வாழ்த்திப் பாராட்டினார் (லூக் 1:45).

இத்தகைய மனநிலை மரியாவின் வாழ்நாள் முழுவதும், குறிப்பாகச் சிக்கலான நேரங்களிலும் வெளிப்படக் காண்கிறோம். இயேசுவின் பிறப்பையொட்டி நடந்த "நிகழ்ச்சிகளை எல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார்" (லூக் 2:19; காண் 2:51). அதாவது, இறைத்திட்டத்தைத் தெளிந்து தேர்வு செய்யும் மனப்பக்குவத்தை மரியா பெற்றிருந்தார். இதன் பொருட்டு, நம்பிக்கையின் அன்னை என அவரைப் போற்றிப் புகழ்வது தகுதியும் நீதியும் ஆகும்.

2. நம்பிக்கையாளர்களின் அன்னை

இயேசு தாம் இறக்கும் வேளையிலும் தம்மைப் பற்றியோ தம் தாயைப் பற்றியோ உற்றார் உறவினரைப் பற்றியோ இயேசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக, தம் சீடர்கள்மீது உண்மையான அக்கறை கொண்டிருந்தார் என்பதை அவர் வாயினின்று வெளிப்பட்ட வார்த்தைகள் உறுதிப் படுத்துகின்றன: இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம், 'அம்மா, இவரே உம் மகன்' என்றார். பின்னர், தம் சீடரிடம், 'இவரே உம் தாய்' என்றார். அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்துவந்தார்" (யோவா 19:26-27). இதன் பொருள் என்ன?

சீடர்களின் பிரதிநிதியாக விளங்கும் யோவானை இயேசு தம் தாயிடம் ஒப்படைக்கிறார். அதே வேளையில், தம் தாயைத் தம் உறவினர்களிடம் ஒப்படைக்காமல் யோவானிடம் ஒப்படைக்கிறார். இதன்மூலம் மரியாவுக்கும் கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளும் சகோதர சகோதரிகள் அனைவருக்கும் இடையே புதியதோர் உறவு மலர்கிறது; தாய்-சேய் உறவாக அது கனிகிறது. இது இரத்த உறவு அன்று, மாறாக நம்பிக்கையினின்று உருவாகும் நட்புறவாகும்.

இந்த நம்பிக்கைக் குடும்பத்தின் தாயாக மரியா விளங்குவதால், அவரை நம்பிக்கையாளர்களின் அன்னை என அழைப்பது சாலப் பொருந்தும்.

3. நம்பிக்கையாளர்களை ஒருங்கிணைக்கும் அன்னை

இயேசுவின் உயிர்ப்புக்குப் பின்னரும் சீடர்கள் எல்லாரையும் ஒருங்கிணைக்கும் சக்தியாக மரியன்னை திகழ்ந்தார். திருத்தூதர்கள் அனைவரும் இயேசுவின் பெண் சீடர் சிலரோடும் அவருடைய உற்றார் உறவினர்களோடும் தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்கள் (திப 1:14).

இளம் திரு அவையில் காணப்பட்ட சிறப்புப் பண்பு அவர்களிடையே நிலவிய ஒற்றுமையாகும். “நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர்; எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர்” (திப 2:44; காண் 4:32, 34-35).

குடும்ப உறவுகளைக் கடந்து, நம்பிக்கைச் சமூகத்திற்குரிய குழும உணர்வோடு அவர்கள் வாழ்ந்துவந்தார்கள்; சமுதாய வேற்றுமைகளைக் களைந்து உடன்பிறப்புகளாக - சமத்துவச் சகோதரத்துவச் சமுதாயமாக வளர்ந்துவந்தார்கள் (கலா 3:28).

இவ்வாறு சிதறி வாழ்ந்த நம்பிக்கையாளர்களை ஒன்றுகூட்டி, ஒருங்கிணைத்து, நம்பிக்கையில் உறுதிப்படுத்தி, அன்புப் பாதையில் வழிநடத்திய பெருமை அன்னை மரியாவைச் சேரும்.

“ஊர் கூடித் தேர் இழுத்தல்” என்பார்கள். ஊர் மக்களிடையே ஒற்றுமையை வளர்த்து வலுப்படுத்த உதவும் சொல்லாடல் இது. அதுபோல, புனித பனிமய அன்னைக்குத் தங்கத் தேர் எடுக்கும் இத்திருநிகழ்வு கத்தோலிக்கர்களை மட்டுமல்ல, இறை நம்பிக்கையாளர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் நல்லுறவும் நல்லிணக்கமும் தழைத்திட நம் பனிமய அன்னை இறைவனிடம் பரிந்துபேசுவாராக!

ஆயர் செ. சூசைமாணிக்கம்

(கட்டுரை சுருக்கப்பட்டுள்ளது. விரிவான படைப்பு தங்கத் தேர் மலரில் வெளியிடப்படும்.)

பனிமயத் தாயே! உம் நம்பிக்கை எமக்குத் தாயே!

பனிமயத் தாயின் பல பண்புகளை பாட்டிலே இசைக்கலாம், ஏட்டிலே எழுதலாம், பண்பாட்டிலே புகழ் சூட்டலாம். இப்பண்புகளில் முக்கியமானது, முதன்மையானது, முன்மாதிரியானது **பனிமயத் தாயின் இறை நம்பிக்கையே ஆகும்.**

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் முதிர்ந்த வயதில் இறையருளால் குழந்தை பெற்றவர்கள் எல்கானா - அன்னா, செக்கரியா - எலிசபெத்து. ஆனால் கணவன் இல்லாமல் குழந்தை பெற்றதாக முன் உதாரணம் ஏதும் பழைய ஏற்பாட்டில் இல்லை. மரியாவுக்கு செய்தி அனுப்பியவர் கடவுள். அனுப்பப்பட்டவர் கபிரியேல் தூதர். இவரிடம் பதின்பருவ மரியா துணிந்து “இது எப்படி நிகழும்? நான் கன்னியாயிற்றே!” என்று கேள்வி எழுப்பினார் (லூக் 1:34). அந்த இளம் வயதிலும் “கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” (லூக் 1:37-38) என்று இறைவனிடம் முழுமையாகச் சரணடைந்தார் மரியா. இவ்வாறு புதிய ஏற்பாட்டில் **‘நம்பிக்கையின் தாயாகிறார் மரியா.** ‘மரியே! ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்’ என்ற எலிசபெத்தின் வாழ்த்து இதை உறுதிப் படுத்துகிறது (லூக் 1:45).

அன்னையினது நம்பிக்கையின் உள்ளடக்கம் எது?

அது நீதியும் அன்பும் என்ற இறையாட்சியின் விழுமியங்களாகும். மற்ற விழுமியங்களான நேர்மை, பகிர்வு, இரக்கம் போன்றவை இவைகளின் விரிவாக்கம், நீட்சி ஆகும். **நம்பிக்கையின் உள்ளடக்கமும் அன்புதான்.** “அன்பின் வழியாகச் செயலாற்றும் நம்பிக்கை ஒன்றே இன்றியமையாதது” (கலா 5:6) என்கிறார் பவுலடியார். இந்த அன்பு மனநிலையின் வெளிப்பாட்டை மரியாவின் வாழ்வில் காணலாம். மரியா ஓடோடிச் சென்று எலிசபெத்திற்கு உதவியதிலும், கானாவூர் திருமணத்தில் தன் மகன் இயேசுவிடம் பரிந்து பேசி அவரை வல்ல செயல் செய்யத் தூண்டியதிலும், இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு தொடர்ந்து சீடர்களை ஒருங்கிணைத்து இறைவேண்டலில் ஈடுபடுத்தியதிலும் காணலாம்.

அன்னையினுடைய நம்பிக்கையின் இலக்கு இயேசு கனவு கண்ட **இறையாட்சியே** - அதாவது சமத்துவ, சமதர்ம சமுதாயத்தைப் படைப்பது ஆகும். இதை இயேசு உறுதிப்படுத்துகிறார். அனைத்திற்கும் மேலாக இறை ஆட்சியையும், இதற்கு ஏற்புடையதையும் நாடுங்கள் (மத் 6:33) என்றார். ‘இறையாட்சி என்பது நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாகத் தூய ஆவி அருளும் (அன்பின் மீது கட்டப்பட்ட) நீதி, (இதிலிருந்து பிறக்கும் உள்ளார்ந்த உண்மையான) அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டது’ (உரோ 14:17).

இதன் அடிப்படையில் இன்று அன்னை நமக்குச் சொல்வதென்ன? “அவர் (இயேசு) உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” (யோவா 2:5). இயேசுவின் தோற்ற மாற்ற நிகழ்வின்போது தந்தை இறைவன் “என் அன்பார்ந்த மகன் இவரே! இவருக்குச் செவி சாயுங்கள்” என்கிறார் (மாற் 9:7). எனவே அன்னையின் **அனைத்து பக்தி முயற்சிகளுக்கும், வணக்கங்களுக்கும் மையமாக அமைவது இயேசுக் கிறிஸ்துவே.** கோள்கள் சூரியனைச் சுற்றுவது போல செபமாலையின் 20 மறை உண்மைகளும்

ஜூன் 2023

இயேசுவைச் சுற்றியே வலம் வருகின்றன. இதுதான் மரியா குறித்த கத்தோலிக்கத் திருஅவையின் அதிகாரப்பூர்வமான போதனை.

எனவே பனிமயத் தாயின் நம்பிக்கை போல நாமும் கடவுள் மீது நம்பிக்கை வைக்கவும், நீதியும் அன்பும் அதன் விழுமியங்களாகவும், இயேசுவுக்கு செவிமடுத்து எல்லோரும் நிறைவோடு வாழும் ஒரு புதிய சமுதாயத்தை அவரோடு இணைந்து படைக்கவும் - இதுவே பனிமய அன்னைக்கு நாம் செய்யும் உயர் மரியாதை, உன்னத மதிப்பு, ஒப்பற்ற வணக்கம் ஆகும்.

நாம் வாழும் இன்றைய உலகில் இறைவன் மீது நாம் வைக்கும் நம்பிக்கை நலிந்தும் மெலிந்தும் சிதைந்தும் சிதிலமடைந்தும் வருகிறது. பொதுவாக கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களையே நாத்திகர்கள் என்கிறோம். ஆனால் வாழ்வில் நம்பிக்கை இழந்தவர்களே உண்மையான நாத்திகர்கள். ஏனெனில் வாழ்வு சாவைக் காட்டிலும் ஆற்றல் படைத்தது. நன்மை (த்தனம்) தீமையைக் காட்டிலும் வலிமையானது, நீதி அநீதியைக் காட்டிலும் வீரியம் கொண்டது. நம்பிக்கை இழந்து வரும் மக்கள் மத்தியில் நம்பிக்கையின் விண்மீனாக வாழ மரியா நமக்கு உதவட்டும்.

நமது தூத்துக்குடி மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 2023 இல் நம்மைச் சந்திக்கத் தேரில் / நேரில் வரும் பனிமயத்தாய் நம் அனைவருக்கும் ஓர் அரிய அழைப்பு விடுக்கிறார். ‘என் அன்பு மகளே! மகனே! நான் முதலில் என் உள்ளத்திலும் (இதயத்திலும்) பின் எனக்கு அருளப்பட்ட இறைக் கொடையால் என் உடலிலும் (கருவிலும்) இயேசுவுக்குத் தாயானேன். நீயும் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றினால் என் மகன் இயேசுவின் தாயாகலாம்’ (காண், மாற் 3:34 35) என்கிறார்.

பனிமயத் தாயின் இந்த அரிய அழைப்பை ஏற்று வாழும் பேற்றினைப் பெறுவோமா?.

அருள்முனைவர் ச.தே. செல்வராசு

(கட்டுரை சுருக்கப்பட்டுள்ளது. விரிவான படைப்பு தங்கத் தேர் மலரில் வெளியிடப்படும்.)

அன்னையின் வழியில்...

ஏழு கடற்துறைக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் ஏக அடைக்கலத் தாயாக கொலுவீற்றிருக்கும் சந்த மரிய தஸ்நேவிஸ் மாதா உண்மையில் சமத்துவத்தின், சகோதரத்துவத்தின், ஒன்றிப்பின் தாயாகவே எல்லோராலும் பார்க்கப்படுகிறார். இத்தாயை உற்று நோக்கி வரங்களைப் பெற்றுக் கொள்ளும் நாம் அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது. அப்பொழுதுதான் நாம் தாயைப் போல பிள்ளைகளாக வாழ முடியும். விவிலியத்தின் அடிப்படையில் அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய மூன்று பண்புகள் மட்டும் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. அன்னையின் பணிவு (லூக் 1:26-38).

கன்னிப் பெண் கருவுறுவதும், ஒரு பெண் தாயாவதும் புதிதல்ல. ஆனால் ஆணின் துணையின்றி ஒரு கன்னி கருவுறுவதும், தாயான பின்னும் ஒரு பெண் கன்னியாகவே நிலைப்பதும் மனித வரலாற்றுக்கு புதிது, மனித அறிவிற்கு புரியாக புதிர். எனவேதான், “இதோ, கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்” என்று கபிரியேல் அதிதூதர் சொன்னதும், “இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!” என்று அன்னை மரியா தனது வியப்பையும் தவிப்பையும் வெளிப்படுத்துகிறார்.

வானதூதர் சுட்டிக்காட்டிய எலிசபெத் சக்கரியா தம்பதியினரின் உதாரணம் ஓர் அடையாளமாக இருப்பினும், அதுவே ஒரு விளக்கமாக அமைய நிச்சயம் வாய்ப்பில்லை. “இது எப்படி நிகழும்?” என்ற கேள்வியை அன்னையின் **அறிவும் அனுபவமும்** எழுப்பியது. “கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை” என்ற வானதூதரின் வார்த்தையை அவரது **இதயமும் விசுவாசமும்** ஏற்றது. எனவேதான், “நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்று உடனடியாக, முழுமையாகத் தன்னை அர்ப்பணிக்க அன்னையால் முடிந்தது.

அறிவைக் கடந்தது விசுவாசம். அறிவு மூளை சார்ந்தது; விசுவாசமோ இதயம் சார்ந்தது. அறிவு மனித வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது; விசுவாசமோ கடவுளின் செயல்களை ஆதாரமாகக் கொண்டது. அறிவு மனித ஆற்றலை, திறமையை முன்னிலைப்படுத்தும்; விசுவாசமோ இறைவனை, இறைவல்லமையை முதன்மைப்படுத்தும். விசுவாசம் மனித பலவீனத்தை உணர்ந்து ஏற்றுக்கொள்வதோடு, இறைவனின் சர்வ வல்லமையில் அடைக்கலம் காணும். அன்னையின் விசுவாசம் “ஆண்டவரின் அடிமை” என்னும் அவரது பணிவில் வெளிப்படுகிறது. பணிவில்லாத இடத்தில் உண்மையான விசுவாசம் இருக்க முடியாது.

அன்னை மரியாவின் பணிவு அல்லது தாழ்ச்சி இயலாமையின் வெளிப்பாடு அல்ல. எந்தவொரு கட்டாயத்தினாலும் அவர் “ஆம்”

என்று சொல்லவில்லை. தனக்குச் சொல்லப்பட்டவை நடப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்ந்து பார்த்து பிறகு, அவர் சம்மதிக்கவில்லை. மாறாக, "தாம் வாக்களித்ததைக் கடவுள் செய்ய வல்லவர்" (உரோ 4:21) என்பதை உறுதியாய் நம்பியதால் அவர் தன்னை அர்ப்பணித்தார். விசுவாசம் அல்லது நம்பிக்கை என்பது ஓடி ஒளிவது அல்ல. உலகத்தை வெறுப்பது அல்ல. மாறாக, இறைவிருப்பத்தை ஏற்பது, அதனைச் செயல்படுத்த தன்னை கையளிப்பது, அதற்காக எதையும், எவரையும் துணிச்சலோடு எதிர்கொள்வதாகும். அன்னையின் தாழ்ச்சிதான் அவரது மாட்சியின் அடித்தளமாக அமைந்தது.

2. அன்னையின் கனிவு (யோவா 2:1-11).

அன்னை மரியாவின் இறைஅர்ப்பணம் பிறரன்பில் வெளிப்படுகிறது. அவரது பணிவு கனிவில் வெளிப்படுகிறது. ஆண்டவரிடம் பணிகிறார்; அயலாரிடம் கனிவு காட்டுகிறார். கானாவூர் திருமண நிகழ்வு அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. வெறும் விருந்தினராக மட்டும் இராமல் விருந்து கொடுப்பவராகவே மாறிவிடுகிறார். அதுவும் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, தானாக முன்வந்து, யாரிடம் முறையிட்டால் குறை நிறையாக மாறும் என்பதை அறிந்து, அதற்குத் தேவையான அனைத்தையும் செய்கிறார்.

அவரது கனிவுள்ளம் பிறர்மீது அவர் கொண்ட நம்பிக்கையில் செயல்வடிவம் பெறுகிறது. முதலில், தன் மகனால் செய்ய முடியும், நிச்சயம் அவர் செய்வார் என்று நம்புகிறார். அடுத்து பணியாளர்கள் மீதும் நம்பிக்கை வைக்கிறார். அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. இயேசுவின் முதல் புதுமை நடைபெற திருமண வீட்டாரிடம் அன்னை மரியா காட்டிய கனிவும் மகன் இயேசுவின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கையும் காரணமாக அமைந்தன.

அவரது கனிவு பரிதாபத்தில் அல்ல, அக்கறையினால் கட்டப்பட்டது. ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்னும் மனவுறுதியினால் எழுப்பப்பட்டது. அவரது கனிவு திருமண வீட்டாரின் கௌரவத்தைக் காத்தது, திருமண மகிழ்ச்சியை குறைவுபடாமல் தக்க வைத்தது. தேவையில் இருப்பவருக்கு கனிவு காட்ட வேண்டும், அவர்கள் குறை தீர ஏதாவது செய்தே ஆக வேண்டும்; தன்னால் முடியாவிட்டாலும், யாரால் முடிகிறதோ அவர்கள் துணை கொண்டு செய்ய வேண்டும் என்பதற்கு அன்னை மரியா ஒரு கலங்கரை விளக்கமாக திகழ்கிறார்.

3. அன்னையின் துணிவு (யோவா 19:25-27).

நாசரேத்தில் தனது வீட்டில் கபிரியேல் தூதர் வழியாக தனது பணிவை வெளிப்படுத்திய அன்னை மரியா, ஐங்கரிம் ஊரில் எலிசபெத் வீட்டிலும் கானாவூர் திருமண வீட்டிலும் தனது கனிவை வெளிப்படுத்திய அன்னை மரியா, இறுதியில் எருசலேமில் கல்வாரி மலையில் நகரத்தார் அனைவர் முன்னிலையிலும் தனது துணிவை வெளிப்படுத்துகிறார். சீமோன் பேதுரு இயேசுவின் சிலுவைப் பாடுகளின்போது அவரோடு இல்லை. திதிம் என்னும் தோமா அவரோடு இல்லை.

உடனிருப்பதற்காக அழைக்கப்பட்டவர்கள் (மாற் 3:14-15) ஓடி ஒளிய, ஊரே தனது மகனுக்கு எதிராக அணி திரண்டு நிற்கும் போதும், துணிச்சலோடு கல்வாரி மலையில் சிலுவை அடியில் அன்னை மரியா நிற்கிறார். தனக்குத் தேவை என்றால் பிள்ளைகளோடு இருப்பதல்ல தாய் பாசம். மாறாக, பிள்ளைகளின் தேவைகளில் துணை நிற்பதுதான் உண்மையான தாய் பாசம். இவ்வாறு, பணிவு, கனிவு, துணிவு இவைகளே அன்னை மரியா நமக்கு காட்டுகின்ற வாழ்வியல் நெறிமுறைகள்.

அருள்தந்தை லெரின் டிரோஸ்

(கட்டுரை சுருக்கப்பட்டுள்ளது. விரிவான படைப்பு தங்கத் தேர் மலரில் வெளியிடப்படும்.)

மரியன்னையின் வழியில் மருத்துவப் பணி

புனித பிரான்சிஸ்குவின் காணிக்கை அன்னை (கோயம்புத்தூர்) துறவற சபையில் மருத்துவராகப் பணியாற்றும் நான் பனிமயத் தாயின் திருத்தலம் வரும்போதெல்லாம் இனம் புரியாத மகிழ்ச்சியும், சொல்லவொண்ணா ஊக்கமும் பெற்றிருக்கிறேன். ஒரு துறவியாகவும், மருத்துவராகவும் பணியாற்றும் இரட்டை அழைத்தலில் நம் அன்னையே எனக்கு மாபெரும் மாதிரியாகவும், அடைக்கலமாகவும் இருக்கின்றார்.

எனக்கு மட்டுமல்ல, எல்லா மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும், நலவாழ்வுப் பணியாளர்களுக்கும் அன்னை மரியாதான் சிறந்த மாதிரி என்பது மிகையில்லாத உண்மை. நலவாழ்வுப் பணி என்பது தன்னை மறுத்து, பிறர் நலனை முன்னிறுத்தி, காலம், சூழல் கருதாது அர்ப்பணிப்புடன் ஆற்றவேண்டிய ஒரு தொண்டு.

இப்பணிக்கான **ஊக்கத்தை, தூண்டுதலை** நாங்கள் யாரிடம் பெறுகிறோம்? நம் மரியன்னையிடமிருந்துதான். அந்த அன்னைதான் தன் நலன்; நினையாது, தன் உதவி தேவைப்படும் தன் உறவினரான எலிசபெத்தின் நலனே பெரிது என்னும் பண்பட்ட, பக்குவம் நிறைந்த மனதுடன் காடு, மேடு என்று பாராது மலைப்பகுதியான ஊருக்கு விரைந்து சென்றார். அங்கேயே தங்கியிருந்து அவருக்குப் பணிவிடை புரிந்தார்.

இறைமகனை உதரத்தில் தாங்கிய எம் அன்பு அன்னையே, உம்மில் நிறைந்திருக்கும் மருத்துவ குணங்கள் எத்துணை அருமையானவை! “அகத்தின் அழகு முகத்தில் தெரியும்” என்ற பொன்மொழிக்கேற்ப உமது முகத்தைப் பார்த்ததும் எத்துணை மகிழ்ந்தார் அந்த எலிசபெத்! இயேசுவின் முன்னோடியை வயிற்றில் சுமந்த எலிசபெத் அம்மாவுக்கு உம் வாழ்த்து மட்டுமல்ல, உமது பணிவிடைகளும் எல்லையில்லா மகிழ்ச்சியைத் தந்தன. அவருக்கு மட்டுமா, அவரது வயிற்றில் இருந்த குழந்தை யோவானுமல்லவா உள்ளம் உவந்தார். எங்கள் மருத்துவப் பணியில் கருவுற்ற

தாய்மார்களைக் காணும்போதெல்லாம், அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கும் எங்கள் அன்பு, அக்கறை, கவனத்தைக் கொடுக்க எங்களுக்கு நீர்தாமே ஊக்கம் ஊட்டுகிறீர், நன்றி அம்மா!

எலிசபெத்து கருவுற்றிருக்கிறார் என வானதூதர் வழியாக அறிந்ததும், நீர் விரைந்து சென்றதாக நற்செய்தியாளர் லூக்கா பதிவு செய்துள்ளாரே. உம்மைப் போலவே நாங்களும் உயிர் காக்கும் பணியில் விரைந்து செயல்படவும், காலம் தாழ்த்தாது சேவை செய்யவும் நீர்தாமே எங்களுக்கு சிறந்த மாதிரி!

இயேசுவின் புன்னகையில் பூத்த ரோஜா மலரே, அன்பின் தாயே, ஆயிரம் ஆயிரம் மனக் கலக்கங்கள் உம் மனதில் இருந்தாலும், மலர்ந்த முகத்துடன் நீர் செய்த உதவிகள் எங்களுக்கும் தூண்டுகோலாய் அமைகின்றன.

அம்மா, அடைக்கலத் தாயே, தூயவராம் கடவுள் உம் வாழ்வில் வியத்தகு செயல்களை நிகழ்த்தியதை நினைத்து உம் உள்ளம் பேருவகை அடைந்ததே. அதுபோலவே, எங்கள் மருத்துவப் பணியில் வல்லவராம் கடவுளின் இரக்கத்தால் பல உயிர்களை நாங்கள் காக்கும்போது நாங்களும் பெருமகிழ்ச்சி அடைகிறோம். உம்மோடு இணைந்து கடவுளைப் போற்றுகிறோம்.

பல விதங்களில் பேறுபெற்ற மரியே, கடவுள் முன்பாக உம்மையே தாழ்த்திக்கொண்டு, ஆண்டவரின் அடிமை என்று உம்மை அழைத்தீரே. நாங்களும் எங்கள் பணியில் தொண்டர் போல எங்களைத் தாழ்த்தவும், பணிவிடை செய்யவும் நீரே மாதிரியாக உள்ளீர்.

கானாவூர் திருமணத்தில் மண வீட்டாரின் இக்கட்டான சூழலை உணர்ந்து, உதவி செய்ய நீரே முன் வந்தீரே. அதுபோலவே, நாங்களும் விழாக்காலங்கள், விடுமுறை நாள்கள், ஓய்வு நேரங்களில்கூட நேரம், சூழல் பார்க்காமல் மருத்துவப் பணியாற்ற எங்களை ஊக்குவிக்கின்றீர்.

“அம்மா” என்று உம்மை அழைத்து மன்றாடும் அனைவரும் நலம் பெறுகிறார்கள். நோயாளர்களின் பெற்றோர். உறவினர்கள் எங்களையும் சில நேரங்களில் “அம்மா இந்த உயிரை காப்பாற்று” என்று அழைக்கும்போது உமது நம்பிக்கை, உமது பரிந்துரைதான் எம்மையும் பலப்படுத்துகிறது.

ஆரோக்கிய தாயே, உம்மை நாடி வருவோர் நலம் பெற்று, அழுகையின் கண்ணீரை ஆனந்தக் கண்ணீராக மாற்றுகின்றனர். எங்கள் பணியும் எளியோரின் அழுகையை அக்களிப்பாக மாற்ற நீரே பரிந்துரைக்கிறீர், நன்றி அம்மா!

இரக்கத்தின் அன்னையே, உலகம் முழுவதும் உமது பிள்ளைகள் எல்லாரும் மிகவும் நம்பிக்;கையோடு செபிக்கும் “மிகவும் இரக்கமுள்ள தாயே” என்னும் வல்லமை நிறைந்த மன்றாட்டை நாங்களும் எத்தனையோ முறை செபித்து, வியத்தகு முறையில் நோயாளர்களை சாவின் பிடியில் இருந்து மீட்டிருக்கிறோமே! உமக்கு நன்றி தாயே.

கடவுளைப் புகழ்ந்து நீர் பாடிய பாடலில் பசித்தோரை நலன்களால் நிரப்பிய இறைவனைப் போற்றினீர். எங்களைத் தேடி வரும் உடல், மன நலம் குன்றியோரை நாங்களும் நலத்தால் நிரப்ப நீர்தாமே உம் திருமகனிடம் எங்களுக்காகப் பரிந்து மன்றாடுகிறீர். உமக்கு நன்றி!

பார் போற்றும் பனிமயத் தாயே, உம் இல்லத்தில் கால் பதித்த நொடிகளில் சலசலவென்று தவிக்கும் மனங்கள் எத்துணை ஆறுதல் பெறுகின்றன. அண்டி வந்தோருக்கு ஆறுதல் தரும் தஸ்நேவிஸ் தாய்மரியே, தங்கத் தேரில் வலம் வந்து உம் மக்கள் எல்லோரையும் ஆசீர்வதியும். குணமளிக்கும் பணியை உமது வழியில் செயல்படுத்திட உதவியருளும்.

அருள்சகோதரி மருத்துவர்
கிரேஸ் மரியா

தங்கத் தேர் 2 கவிதைகள்

அன்னை நம் விந்தை

பனிபெய்ய இயலா ஆகஸ்டு மாதத்திலே
உறைபனி பொழிந்து உறைய வைத்தாய்!
எஸ்கலின் மலைமேல் எழுந்தருளிய நீர்
எழுகடல் துறைக்கும் ஏற்றம் தந்தாய்!
நீயே எம் விந்தை! நீயே எம் சிந்தை!

எந்தன் நகரின் அழகு பெட்டகமே
அகிலம் போற்றும் அழகு சித்திரமே!
வங்கக் கடலோரம் வாழும் அதிசயமே
கடல்வாழ் மக்களின் காவல் தெய்வமே!
நீயே எம் விந்தை1 நீயே எம் சிந்தை!

இயேசுவின் சிலுவை அடியினிலே நின்று
இறைமகன் உயிர்விடும் நொடியினிலே - எம்மை
இதோ உன் தாயென இகத்திற்கு காட்டிட
தாயாய் கிடைத்த அழகு புஷ்பமே!
நீயே எம் விந்தை1 நீயே எம் சிந்தை!

அன்பு என்னும் சொல்லுக்கு அடையாளமே
ஆண்டவன் தந்த அதிசய உறவே!
அள்ளி அள்ளி பாசத்தை கொடுப்பாய்
ஆண்டவரிடம் பரிந்துரைப்பாய் அன்றாடம் எமக்காய்.
நீயே எம் விந்தை1 நீயே எம் சிந்தை!

தங்கத்தேரில் வலம்வரும் தங்கத் தாரகையே!
தரணியர் போற்றும் எம் தாய்மரியே
தஞ்சமென்று நின்பாதம் வந்தால் - நித்தம்
நெஞ்சில் சுமப்பவள் நீயல்லவோ!
நீயே எம் விந்தை1 நீயே எம் சிந்தை!

சகோ. பிரகாசி FBS

மாதம் ஒரு மாதா படம் 39

ஓவியர் ஜெயராஜ்

பனிமய அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழா 2023

வினா - விடைப் போட்டி (3)

பனிமய அன்னையின் 16ஆவது தங்கத் தேர்ப் பெருவிழாவை முன்னிட்டு வினா-விடைப் போட்டி ஒன்று கடந்த ஏப்ரல் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏப்ரல் இதழில் “இடியின் இரகசியம்” நூலிலிருந்து பனிமய அன்னையின் திருச்சுருபம் தொடர்பான 25 கேள்விகளும், அவற்றிற்கான விடைகளும் தரப்பட்டன. மே மாத இதழில் திரு. தாமஸ் வாஸ் அவர்களின் “ஓர் அன்னை, ஓர் ஆலயம், ஓர் ஊர்” என்னும் கட்டுரையிலிருந்து தங்கத் தேர் தொடர்பான 25 கேள்விகளும், அவற்றிற்கான விடைகளும் தரப்பட்டன. இந்த மாதம் பனிமய அன்னைப் பேராலயப் பங்குத் தந்தையர் பற்றி 25 கேள்விகளும், அவற்றிற்கான விடைகளும் தரப்பட்டுள்ளன. ஜூன் மாத இதழில் இறுதி 25 கேள்வி- விடைகள் தரப்படும். ஆர்வமுள்ள வாசகர்கள் இந்த 100 கேள்விகளையும் படித்துவிட்டு, ஜூலை மாதம் நடைபெறவுள்ள எழுத்துத் தேர்வில் கலந்துகொண்டு பரிசுகளை வெல்லலாம். போட்டியின் இதர விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

51. தூத்துக்குடி மறைமாவட்டம் என்று தோற்றுவிக்கப்பட்டது? **12.06.1923**
52. தூத்துக்குடி மறைமாவட்டம் தோன்றியபிறகும் பனிமய அன்னை பேராலயப் பங்கு எந்த மறைமாவட்டத்துடன் இணைந்திருந்தது? **மயிலாப்பூர்.**
53. பனிமய அன்னை பேராலயப் பங்கு என்று தூத்துக்குடி மறைமாவட்டத்துடன் இணைக்கப்பட்டது? **07.04.1930.**
54. பனிமய அன்னை பேராலயப் பங்கு தூத்துக்குடி மறைமாவட்டத்துடன் இணைக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகின்றன? **93** (1930-2023).
55. கடந்த 93 ஆண்டுகளில் பனிமய அன்னை பேராலயப் பங்கின் பங்குத் தந்தையராக எத்தனை பேர் பணியாற்றியுள்ளனர்? **20.**
56. பனிமய அன்னைப் பேராலயப் பங்கில் மயிலாப்பூர் மறைமாவட்டத்தின் கடைசிப் பங்குத் தந்தை யார்? அருள்தந்தை **ஜோசப்.**
57. பனிமய அன்னைப் பேராலயப் பங்கில் தூத்துக்குடி மறைமாவட்டத்தின் முதல் பங்குத் தந்தை யார்? அருள்தந்தை **அம்புரோஸ் மிசியர்** (1930-1932).
58. பனிமய அன்னைப் பேராலயத்தின் இரு பக்கங்களிலும் மக்கள் அமரும் பகுதிகள் (குருஸ்பத்தி) எப்போது, யாரால் கட்டப்பட்டன? அருள்தந்தை **சோய்ஸா** பங்குத் தந்தையாகப் பணியாற்றிய (1901-1905) காலத்தில் கட்டப்பட்டன.
59. பனிமய அன்னைப் பேராலயத்தின் பெரிய (மணிக்) கோபுரம் எப்போது, யாரால் கட்டப்பட்டது? பங்குத் தந்தை அருள்திரு **மோனீஸ்** அவர்களால் 1922ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
60. பனிமய அன்னைப் பேராலயத்தின் பெரிய (மணிக்) கோபுரம் பற்றிய கல்வெட்டுகள் எத்தனை இன்னமும் இருக்கின்றன? **இரண்டு.**
61. பனிமய அன்னைப் பேராலயத்தின் பெரிய (மணிக்) கோபுரம் பற்றிய முதல் கல்வெட்டில் என்ன பொறிக்கப்பட்டுள்ளது? மயிலாப்பூர் ஆயர் மேதகு **தியோடோன்டோ காஸ்ட்ரோ,**

பங்குத் தந்தை அருள்திரு. **மோனீஸ்**, உதவிப் பங்குத் தந்தை அருள்திரு. **சஞ்சீவி** மூவரின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

62. பனிமய அன்னைப் பேராலயத்தின் பெரிய (மணிக்) கோபுரம் பற்றிய இரண்டாவது கல்வெட்டில் என்ன பொறிக்கப்பட்டுள்ளது? "**விசுவாசிகளின் விசுவாசம் இதனைக் கட்டியது**" என்று தமிழிலும், இலத்தீன் மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளது.
63. பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் இரண்டாவது பங்குத் தந்தை யார்? அருள்தந்தை (இறையடியார்) **அந்தோனி சூசைநாதர்** (1932-1938).
64. பனிமய அன்னைப் பேராலயத்தின் வெண் சலவைக் கல் பீடம் எந்த நாட்டிலிருந்து, எப்போது தருவிக்கப்பட்டது? **1934ஆம்** ஆண்டு **இத்தாலி** நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது.
65. பனிமய அன்னைப் பேராலயத்தின் வெண் சலவைக் கல் பீடத்தின் நன்கொடையாளர் யார்? திருமிகு. **கஸ்பார் கோமஸ்.**
66. பனிமய அன்னைப் பேராலயத்தின் வெண் சலவைக் கல் பீடத்தின் கல்வெட்டில் என்ன பொறிக்கப்பட்டுள்ளது? தமது பெற்றோர் திருவாளர்கள் **எம்.பி. கோமஸ், மரிய சூசையம்மாள் கொரேரா** இருவரின் நினைவாக மகன் கஸ்பார் கோமஸ் வழங்கியது என்று பொறிக்கப்பட்டுள்ளது.
67. அருள்தந்தை அந்தோனி சூசைநாதர் காலத்தில் கட்டப்பட்ட புனித பிலோமினம்மாள் மண்டபத்தின் இன்றைய பெயர் என்ன? **அந்தோனியார்** (மண்டபம்) **அரங்கம்**.
68. பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் மூன்றாவது பங்குத் தந்தை யார்? அருள்தந்தை **அம்புரோஸ் மிசியர்** (1938-1939).
69. பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் நான்காவது பங்குத் தந்தை யார்? அருள்தந்தை **ஜி. மிக்கேல்** (1939-1940).
70. பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் ஐந்தாவது பங்குத் தந்தை யார்? அருள்தந்தை **டி. மிக்கேல்** (1940-1941).
71. பனிமய அன்னைப் பேராலயத்தின் திருப்பீட முகப்பில் பெரிதாக இலத்தீன் மொழியில் எழுதப்பட்டிருக்கும் "SANCTA MARIA ORA PRO NOBIS" என்னும் சொற்களின் பொருள் என்ன? "புனித மரியே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்".
72. யாருடைய காலத்தில் நமது பேராலயம் பசிலிக்காவாக உயர்த்தப்பட்டது? அருள்தந்தை **லாம்பர்ட் மிராண்டா** (1979 - 1984).
73. நமது பேராலயத்திலும், திரு இதயங்களின் பேராலயத்திலும் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய சிறப்புக்குரியவர்கள் யாவர்? அருள்தந்தை **கபிரியேல்**, அருள்தந்தை **ஜோப் டிரோஸ்,** அருள்தந்தை **லாம்பர்ட் மிராண்டா**
74. இந்தியா விடுதலை பெற்ற ஆண்டில் (05.08.1947) 8ஆவது முறையாகத் தங்கத் தேர் பவனியின்போது பங்குத் தந்தையாக இருந்தது யார்? அருள்தந்தை **பவுல் அலங்காரம்**. (1942 - 1952).
75. தமது பணிக் காலத்தில் இருமுறை தங்கத் தேர் பவனிவரச் செய்த பங்குத் தந்தை யார்? அருள்தந்தை **எஸ்.எம். தல்மேய்தா** (9ஆம் முறை 1955, 10ஆம் முறை 1964. 1954 முதல் 1970 வரை 16 ஆண்டுகள் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார்கள்.)

(மேற்கண்ட 25 கேள்விகளும் 1980ஆம் ஆண்டு வெளிவந்த "பொன்விழா மலரில்" திரு. தாமஸ் வாஸ் அவர்களின் "ஓர் அன்னை, ஓர் ஆலயம், ஓர் ஊர்" என்னும் கட்டுரையிலிருந்தும், திரு. சொர்ணராஜன் விக்டோரியா அவர்களின் "பனிமய அன்னை" நூலிலிருந்தும் எடுக்கப்பட்டுள்ளன.)

தங்கத் தேர் 2023 மைல் கற்கள் - 2

18. **நிதி திரட்டும் குழு.** 04.11.2022 அன்று மீண்டும் கூடியது. தூத்துக்குடி நகரிலுள்ள 13 வகையான சங்கங்கள், அமைப்புகளைச் சந்தித்து நன்கொடை திரட்டுவது என்றும், கடலோரப் பங்குகள் மற்றும் மீனவ மக்கள் வசிக்கும் 54 ஊர்களைச் சந்தித்து நன்கொடை விண்ணப்பங்களைக் கொடுக்கலாம் என்றும் முடிவுசெய்யப்பட்டது.

19. **தொழில் நுட்பக் குழுவினர்** 30.11.2022 அன்று கூடினர். தேரின் அச்சுகளில் இரும்பு வளையங்களை இணைக்கும் லேத் பட்டறைப் பணிகளை முந்தைய தேர்களில் பணியாற்றிய ஜெயா எஞ்சினியரிங்கின் திரு. ஜெய ராயன் அவர்களிடம் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

20. **தேரைப் பார்வையிட அனுமதி.** 27.12.2022 அன்று தங்கத் தேர் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடைபெற்றது. தேர்ப் பிறைக்குள் யாரையும் அனுமதிக்க வேண்டாம் என்னும் ஒழுங்கில் ஒரு மாற்றம் செய்யப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியூர் ஆள்கள், முன்பின் தெரியாதவர்களுக்கு மட்டும் அனுமதி மறுக்கப்படலாம். பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள், நன்கொடையாளர்கள், சிறப்பு விருந்தினர்கள், பணியாளர்களின் நண்பர்கள் ஆகியோர் முறைப்படி அனுமதி பெற்று, பணிகளைப் பார்வையிட்டு, உடனே வெளியேறிவிட அனுமதிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

21. **தேர்த் தட்டுகளைச் சுத்தம் செய்தல்.** 09.01.2023 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் (கூட்டம்: 14) இதுவரையில் 3ஆவது தட்டின் பணிகள் நிறைவுபெற்றுள்ளன. பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த வாரத்தில் 4ஆவது தட்டு போடப்படும். ஆயக்குடியிலிருந்து வரவிருக்கும் பார்டர் டிசைன்கள் வந்தவுடன், அவற்றைப் பொருத்தும் பணி நடைபெறும் என்று பகிரப்பட்டது. மேலும், தேரின் 3 தட்டுகளையும் சுத்தம் செய்யும் பணியை உடனே தொடங்கலாம் என்றும், பழைய தாளை உறிக்கும் பணியையும் உடனேயே தொடங்கிவிடலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மாதா சுரூபத்தைத் தாங்கும் நல்கருவை மரம் நன்றாகவே இருக்கிறது. அதனை மாற்ற வேண்டாம் என்று பரிந்துரைக்கப்பட்டது. தேரின் தச்சுப் பணிகள் முடிந்தபின் மீதமுள்ள மரத்தைக் கொண்டு திருவிழா சப்பரத்தையும் மேம்படுத்தலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

22. **தன்னார்வத் தொண்டர்களுக்கு அழைப்பு.** 21.01.2023 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் (கூட்டம்: 15) புதிய தேரின் ஃபவுண்டேஷன் பணிகள் முடிந்துள்ளன. 12 எஸ் வடிவ பலகைகளும் (சிறியது) பொருத்தப்பட்டுவிட்டன. இன்னும் 6 எஸ் வடிவ பலகைகள் (பெரியது) பொருத்தப்பட வேண்டும். அவற்றுக்கு மேல் அடுத்த வாரம் ஆயக்குடியிலிருந்து வரும் டிசைன் செய்யப்பட்ட பலகைகள் தேர்த் தட்டுகளில் பொருத்தப்படும் என்று முடிவு செய்யப்பட்டது. தங்கத் தேர்த் திருப்பணிகளில் தன்னார்வமாக இலவச சேவை செய்ய விரும்புகிறவர்களுக்கு ஞாயிறு திருப்பலியில் அழைப்பு விடுக்கலாம் என்று பரிந்துரைக்கப்பட்டது.

23. **சக்கரங்களைப் பொருத்திப் பார்த்தல்.** 28.01.2023 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் (கூட்டம்: 16) புதிய தேரில் சக்கரங்களை மாட்டி பொருத்திப் பார்க்க முடிவு செய்யப்பட்டது. இரும்புக் கம்பியால் செய்யப்பட்ட ஸ்குருகள் துருப் பிடித்துவிடுகின்றன என்பதால், இந்த முறை செம்பு (காப்பர்) கம்பிகளைப் பயன்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

24. **தணிக்கையாளருடன் கலந்தாய்வு.** 30.01.2023 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் (கூட்டம்: 17) தங்கத் தேர் வரவு-செலவுகள் பற்றிப் பேராலயத் தணிக்கையாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டது. ஞாயிறுதோறும் பேராலயத்தில் தங்கத் தேர் வரவு செலவுகளை வாசிப்பது நல்ல பழக்கம். அது நிர்வாகத்தின் திறந்த மனநிலையைக் காட்டுகிறது. அதை வாசித்தால் போதும், எழுத்தில் வாட்ஸ் அப் வழியாக அனைவருக்கும் அனுப்பத் தேவையில்லை. பத்தாயிரம் ரூபாய்க்கு அதிகமாக நன்கொடை தருபவர்களிடமிருந்து பான் அட்டை நகல் பெறவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

25. **அலங்காரப் பணிகள்.** 01.02.2023 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் (கூட்டம்: 18) தங்கத் தேர் அலங்காரப் பணிகள் பற்றி கலந்தாலோசனை செய்யப்பட்டது. தாள் கிழித்தல், தேர்ப் பாகங்களை சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை உடனே தொடங்கலாம் என்றும், தங்கத் தாள் ஒட்டும் பணிகளை உயிர்ப்புப் பெருவிழா (09.04.2023) அன்று தொடங்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. தங்கத் தாள், சிறப்புக் கற்கள், கண்ணாடிகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆர்வம் உள்ளவர்கள் தங்களின் மாதிரிகளை குழுவினரிடம் கொண்டு வந்து காட்டலாம். தேர் அலங்காரக் குழுவினர் தேவையான மாதிரிகளைத் தேர்ந்தெடுப்பர் என்று முடிவு செய்யப்பட்டது. தங்கத் தாளை பலகையில் ஒட்டி ஒரு மாதம் பொறுத்து அதன் தரம் சோதித்துப் பார்க்கப்பட வேண்டும். பெருவிழா அன்று தங்கத் தேர்ப் பவனி முடிந்ததும், பெருந்திரளான மக்கள் தேரைச் சூழ்ந்துகொண்டு, தாள், கற்கள், கண்ணாடிகள் ஆகியவற்றைப் பிய்த்துக்கொண்டு போகும் காட்சி அவசங்கையாக இருக்கும். எனவே, இம்முறை அதனைக் குறைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். கற்கள், கண்ணாடிகள் போன்றவை கூடுதலாக வாங்கி தேரில் மாதாவின் பாதத்தில் வைத்து பவனியாக எடுத்து வரப்பட்டு, பின்னர் மக்களுக்கு ஒழுங்கமைதியுடன் வழங்க ஏற்பாடு செய்யலாம் என்று பரிந்துரைக்கப்பட்டது. அதுபோலவே, நன்கொடையாளர்களுக்கும் சில பொருள்களை ஒதுக்கி வைத்து, பங்குத் தந்தையால் வழங்கப்படலாம்.

26. **12 தூண்கள் பற்றிய கலந்தாய்வு.** 13.02.2023 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் (கூட்டம்: 19) தேரின் 12 தூண்கள் பற்றிப் பேசப்பட்டது. வெளிப்புற டிசைன்கள் கடந்த காலங்களில் பூசப்பட்ட ஃபெவிகால் மற்றும் ஒட்டப்பட்ட தாள்களினால் மழுங்கிவிட்டன. எனவே, புதிதாக தேக்கு மரம் வாங்கி, புதிதாகவே டிசைன் செய்தால் நன்றாக இருக்கும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

27. **12 தூண்களையும் புதிதாகச் செய்ய முடிவு.** 20.02.2023 அன்று நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் (கூட்டம்: 20) தேரின் 12 தூண்களையும் புதிதாகச் செய்ய ஒப்புதல் தரப்பட்டது. தேக்கு மரம் வாங்க ஏறக்குறைய ரூ. 14 இலட்சமும், ஆயக்குடியில் டிசைன் செய்ய ஏறக்குறைய ரூ. 16 இலட்சமும் என மொத்தமாக ரூ. 30 இலட்சம் கூடுதலாக செலவாகும். இது நாம் எதிர்பாராத ஒரு கூடுதல் செலவு. இருப்பினும், போதுமான நன்கொடை பிரிந்துவிடும் என்ற நம்பிக்கையில் இந்தத் தூண்களைப் புதுப்பிக்கும் பணியைச் செய்யலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

(தொடரும்)

ஏழு கடல் துறையுடன் எல்லார்க்கும் ஏக அடைக்கலத் தாயாய்
இன்முகம் காட்டி எழுந்தருளி அன்போடு ஆட்சி புரியும் திருமந்திரநகர்

திவ்விய சந்தமரிய தஸ்நேவிஸ் மாதா பேராலய

441-ஆம் ஆண்டு பெருவிழா மற்றும்
தூத்துக்குடி மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு
பனிமயத் தாயின் 16ஆவது பொற்தேர்

பெருவிழா அறிக்கை

26.07.2023 – 05.08.2023

26.07.2023 கொடியேற்ற விழா புதன்கிழமை

காலை 05.00 மணி முதல் திருப்பலி
05.45 மணி இரண்டாம் திருப்பலி
07.00 மணி **சிறப்புத் திருப்பலி, கொடியேற்றம்**
தலைமை : மேதகு **ஸ்டீபன்** ஆண்டகை
தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர்

நண்பகல் 12.00 மணி அன்னைக்குப் பொன் மகுடம் அணிவித்தல்
தலைமை : மேதகு **நசரேன்** ஆண்டகை
கோட்டாறு மறைமாவட்ட ஆயர்

மாலை 03.00 மணி தேர்ஸ் – மறையுரை
மேதகு **நசரேன்** ஆண்டகை
கோட்டாறு மறைமாவட்ட ஆயர்

மாலை 05.30 மணி இளையோர் ஆசீர்வாதத் திருப்பலி
தலைமை : மேதகு **நசரேன்** ஆண்டகை
கோட்டாறு மறைமாவட்ட ஆயர்

இரவு 07.15 மணி நற்கருணை ஆசீர்
தலைமை : மேதகு **இவோன் அம்புரோஸ்** ஆண்டகை
தூத்துக்குடி மேனாள் ஆயர்

04.08.2023 பெருவிழா மாலை ஆராதனை வெள்ளிக்கிழமை

இரவு 07.00 மணி **பெருவிழா மாலை ஆராதனை**
தலைமை : மேன்மைமிகு கர்தினால் **பிலிப் நேரி**
கோவா உயர்மறைமாவட்ட பேராயர்

05.08.2023 தூய பனிமய அன்னையின் பெருவிழா சனிக்கிழமை

காலை 07.00 மணி **தங்கத் தேர் சிறப்புத் திருப்பலி**
தலைமை : மேன்மைமிகு கர்தினால் **பிலிப் நேரி**
கோவா உயர்மறைமாவட்ட பேராயர்

விவிலியப் போட்டி 101

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

திருப்பாடல்கள் 6 முதல் 15 வரை

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

கோடிட்ட இடங்களை நிரப்புக :

1. .... உம் கூடாரத்தில் தங்கிட தகுதியுள்ளவர் யார்?
2. .... பேரன்பை முன்னிட்டு என்னை மீட்கலாம்.
3. அவர் .... உற்றுநோக்குகின்றன.
4. பொல்லார் தம் இறுமாப்பினால் .... கொடுமைப்படுத்துகின்றனர்.
5. அவர் கண்கள் ....
6. .... காத்தருளும்.
7. மாட்சியையும், மேன்மையையும் முடியாக சூட்டியுள்ளீர்.
8. அனாதைகளுக்கு நீரே ....

விடைகளைக் கோர்த்தால் ஆறுதலான வார்த்தை கிடைக்கும்.

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.06.2023

விவிலியப் போட்டி 100

மே 2023 | **விடைக்குறிப்புகள்**

திருப்பாடல் 1, 2, 3, 4, 5

1.	நேர்மையாளருக்கு	திபா 5:12
2.	பாவிகள்	திபா 1:5
3.	பாவம்	திபா 4:4
4.	தீமைக்கு	திபா 5:4
5.	கேடயம்	திபா 3:3
6.	வழிபடுங்கள்	திபா 2:11
7.	கருணை	திபா 5:12
8.	அமைதியாயிருங்கள்	திபா 4:4

உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

94893 19976 அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 192

I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து
சரியான விடை எழுதியவர்கள் : 114

விடை எழுதிய அன்பியங்கள் : 27

பரிசு பெறுபவர்கள் : 4

1.	அந்தோனியார் அன்பியம்	**சரோஜா**
2.	அன்னை தெரசா அன்பியம்	**சுகன் மோனிஷா**
3.	அன்னை வேளாங்கன்னி அன்பியம்	**ஆல்வின் மோத்தா**
4.	கிறிஸ்தரசர் அன்பியம்	**லூரட் வசந்த்**

பாராட்டுக்குரியவர்கள் : 109

அந்தோனியார் அன்பியம்
5. பிருந்தா சார்லஸ்
6. ஜெயா
7. லூக்காஸ் சகாயம்
8. ரீனா மொறாயிஸ்

அன்னை தெரசா
9. சுரேஷ் பிரேமா
10. ரெயிசா சுஜய்
11. ஜூலியட் ஜெயரூபி

அன்னை வேளாங்கன்னி
12. டென்சி
13. நான்சி
14. ஆரோன் ஷாரோன்

கிறிஸ்தரசர்
15. செலஸ்கி கிளமென்ட்
16. ரெக்ஸ் கிரீன்வெல்
17. ஜூலியட் சாவியோ
18. இவாஞ்சலின்

தஸ்நேவிஸ் மாதா
ஒருவருமில்லை

திவ்யபாலன் அன்பியம்
19. பிரின்சி
20. சகாயராஜ் தனராஜ்

பாத்திமா மாதா
21. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
22. ஜெசிந்தா கான்ஸ்டன்
23. ராஜா ரீனா
24. ஆல்வின் அனு
25. ஜெனிட்டா மைக்கேல்

இரக்கத்தின் மாதா
26. பாப்டிஸ்டா
27. சித்ரா மோத்தா
28. பிரைட்டன் ஜெரோபின்
29. ஆக்னல்
30. இருதயம்மாள் கொன்சால்

ஜெபமாலை மாதா
31. சகாயம்மாள் பெனடிக்ட்
32. கல்யாணி செல்வராஜ்
33. ஸ்நோ ஆட்ரினா

ஜூடு அன்பியம்
34. அந்தோனிசாமி
35. ட்ரைபேனா
36. டெரன்சியா அரிஸ்டோ

காவல்தூதர்
37. வெனிட்டாள்
38. ஜெசிமா கிளாரன்ஸ்
39. சாந்தி ஆல்ட்ரின்
40. ட்ரினிஷா
41. மைக்கேல் டெய்சி
42. எலிஜா இம்மானுவேல்
43. ஜான் ஆல்ட்;ரின்
44. ஜூலியஸ் தல்மேதா

குழந்தை தெரசா
45. கிறிஸ்டி லிஸ்டன்
46. ஜூலி
47. பெனி மொறாயிஸ்
48. பெர்லி பென்சன்

குழந்தை இயேசு
49. மோனிகா செபாஸ்டின்
50. அந்தோனியப்பா பிச்சம்மாள்
51. எமல்டா
52. பிரான்சிஸ் வாஸ்
53. ஆரோக்கியராஜ் ஹெலினா

லூர்து மாதா
54. ஜெனோ சேவியர்
55. ரம்யா
56. ரோஸ்லின் தாமஸ்
57. சாண்டினா
58. ஆலிவர் வி. ராயன்
59. சகாயராணி
60. ரஜூலா ஜான் போஸ்கோ

மணல் மாதா
61. கெயிட்டன் ஃபர்னான்டோ
62. ரொசாரி கோமஸ்
63. ஜெயந்தி
64. ரொசாரி ரசிகா
65. அமல் தர்ஷினி
66. ஹெப்பிட்டா

மிக்கேல் அதிதூதர்
67. எல்சிட்டா
68. ஷீபா
69. டெஷ்பா

பனிமய அன்பியம்
70. ஜூடு ரதி
71. மெர்சி கோமஸ்

பவுலடியார்
72. ராஜா ரோஸ்லின்
73. ரஸ்கின் வசந்தா
74. ஜான்சன் ஒஃபிலியா
75. லீமா ரோஸ்
76. ஹெலினா

பரிபூரணமாதா
77. மெடோனா
78. ஜெனிஷா
79. பிரைட் டீனா

பொம்பெயி மாதா
80. மாத்யூ கர்டோசா
81. இ;ம்மாக்குலேட்
82. டிஃபானி அண்டோ
83. அந்தோனியம்மாள் மச்சாடோ
84. லூடா கான்ஸ்டன்
85. ஜான்சி ராணி
86. ஸ்நோ ஆல்பிரிக்
87. தெரசா பிரகாஷ்

இராயப்பர்
88. நேவிசம்மாள்
89. ஷைனி

சவேரியார்
90. டெலிலா அமலன்
91. அனுஷ்யா பீட்டர்
92. ரூபா மனுவேல்
93. சகாயம் ஆண்டன்
94. ஜோர்னல் ஜென்சி

செபஸ்தியார்
95. அந்தோனியம்மாள் டென்சிங்
96. ஜெசிலா சேவியர்
97. அஸ்கேவியஸ்

சிந்தாத்திரை மாதா
98. நேசம்
99. ஜூடி ஆரோக்கியராஜ்
100. டிஜேபிஆர் இராயன்
101. மெடோனா ஜோசப்
102. நான்சி ஜோ
103. ராஜி ஜஸ்டின்

சிறுமலர் அன்பியம்
104. செலஸ்டின்
105. விஜி சகாயராஜ்
106. எல்சிட்டா ஆனந்த்

சூசையப்பர்
107. மென்சி
108. கிறிஸ் ரிஜோ
109. ஜூடி கெஜேந்திரன்
110. ரூபி கொர்னேலியுஸ்

திருச்சிலுவை
111. சரோலின் கில்டன்

வியாகுல மாதா
112. கெலிண்டன்
113. லூர்து லினட்
114. ராஜா ஜரின்

II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 78

பரிசு பெறுபவர்கள் : 4

115. தூத்துக்குடி லயன்ஸ் டவுண்	**சகாயம்**	117. தூத்துக்குடி காந்தி நகர்	**பேபி வால்டர்**
116. தூத்துக்குடி ஸ்டேட் பாங்க் காலனி	**செக்கரியா சாமுவேல்**	118. கனடா	**மேரி ஆனி தாமஸ்**

பாராட்டுக்குரியவர்கள் : 74

ஆலந்தலை
119. ஃபொன்சேகா
120. மரியம்மாள்
121. சுரேஷ் சில்வேரா
122. சகாயராணி
வீரபாண்டியன்பட்டணம்
123. ஆன்ட்ரின் சில்வேரா
124. ஷாந்தினி
125. ஸ்வர்ண மெசியாஸ்
ஆறுமுகனேரி
126. தொம்மை அந்தோனி
சேதுக்குவாய்த்தான்
127. ஞானம் பாலசிங்
புதியம்புத்தூர்
128. ஹெலன் அன்னமணி
சென்னை
129. கமலஜோதி ஜெயசீலன்
130. ஒஃபிலியா தாமஸ்
131. எட்வர்ட்
132. வின்செந்தி
பாளையங்கோட்டை
133. பிரேமா குணசீலன்
134. சுவர்ணா
135. டெனிசா ஃபர்னான்டோ
136. ரோசி ஜெ.
பேட்டை
137. ஹெலனிட்டா
கயத்தாறு
138. அமல்ராஜ்
உரியூர்குப்பம்
139. சகோ. லெட்டீசியா
பெரியகுளம்
140. குழந்தை தெரஸ்
திண்டுக்கல்
141. மரிய மதலேன்
142. ஜெர்மேன்
143. ரொசாலி
கோயம்புத்தூர்
144. சகோ. லூக்காஸ்
145. ஆஷா தனசீலன்
பல்லடம்
146. பிரான்சிஸ் ஆர்லன்
திருமானூர், கும்பகோணம்
147. பீட்டர்
அரக்கோணம்
148. குமாரி சந்திரசேகர்
திருச்சி
149. மோனிட்டா கிறிஸ்டி
150. மேத்யூ விவேக்
151. டோனி
152. சில்வியா மேரி
மதுரை
153. சகோ. அப்போலின்
வடக்குத்து
154. ஹென்றிதாஸ்
பாம்பன்
155. சுதா
பரமக்குடி
156. சீமோன் விமல் சாந்தி
கும்பகோணம்
157. குழந்தை தெரஸ்

தூத்துக்குடி நகர பங்குகள்

திரு இருதயங்களின் பேராலயம்
158. சுசீலன்
159. ரமோலா கமிலஸ்
160. ரிமோல்டா
161. ஜேன் கிளைட்டன்
162. ஜூலியட் வாஸ்
163. டீனா ராய்
164. ஜோசபின் சகாயராஜ்
குருஸ்புரம்
165. ஆசீர்வாதம்
166. பௌவுசி ஜோ மைக்கேல்
167. டெல்ஃபின்
168. பிளசி செல்வராஜன்
லயன்ஸ் டவுண் சகாய மாதா
169. சுகிர்தா
170. ரதி
யூதா ததேயு கோவில்
171. ரோஸ் சேவியர்
172. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
காந்திநகர்
173. சாந்தினி
174. ரியாலினோ
175. அன்சிட்டா
176. ரமேஷ் நர்மதா
லூர்தம்மாள்புரம்
177. ரெனிஸ்டன் ஜெர்லின்
சார்லஸ் கோவில்
178. சகாயிற்றா மச்சாது
அன்னை வேளாங்கன்னி கோவில்
179. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
180. லிஜியா ஃபர்னான்டோ
181. ஜெசிந்தா ஃபர்னான்டோ
இஞ்ஞாசியார்புரம்
182. அற்புத செல்வி
183. சூசை நவீன்
இரத்னபுரம் சவேரியார் கோவில்
184. விர்ஜின்
185. தயாபர ராணி
அந்தோனியார் கோவில்
186. சோஃபியா விஜய்
187. மென்சிலா லொயோலா
188. இருதயம்மாள் கபிரியேல்
189. ஞானிஸ்
திரேஸ்புரம்
190. கோல்வின் ஜேசுராஜ்
பாத்திமா நகர்
191. ஹேம்லின் விஜய்
கோவளம்
192. சரோஃபின் ஜோசப்

கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 196

இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 192

பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 47)

ஜூன் - 2023

அதிபர் & பங்குத் தந்தை	:	அருள்முனைவர் குமார்ராஜா	94431 47823
உதவிப் பங்குத் தந்தை	:	அருள்பணி பால் ரோமன்	94889 42202
களப் பணியாளர்	:	சகோதரர் ஆல்ட்ரின்	94893 19976
பங்கு அலுவலகம்	:		2320854
பங்கு அலுவலக வாட்ஸ் அப்	:		82209 47823

திருவழிபாட்டு நேரங்கள்

தினசரி திருப்பலிகள்	சனிக் கிழமைகளில்		ஞாயிற்றுக் கிழமைகளில்	
காலை 5.30, 6.30	காலை 5.30, 6.30	திருப்பலி	காலை **5.00, 6.30, 8.00**	திருப்பலி
மாலை 5.30	காலை 11.00	செபமாலை, **நவநாள் திருப்பலி**	காலை **9.30**	ஆங்கிலத் திருப்பலி
	மாலை 5.30	திருப்பலி	மாலை **5.30**	திருப்பலி
	மாலை 6.30	நவநாள், நற்கருணை ஆசீர்	மாலை **6.30**	நற்கருணை ஆசீர்

ஒப்புரவு அருள்சாதனம் தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ கூட்டுத் திருமணம் : 20.08.2023
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 28.05.2023
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 30.07.2023

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.30 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

பனிமயச் சுவடுகள்

(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

461. பனிமயத் தாயின் தங்கத் தேரை நிறுத்த புதிய தேர்ப் பிறை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் இறைவேண்டல் நிகழ்வு 23.04.2023 ஞாயிறு காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. புதிய தேர்ப்பிறைக்கான செலவு ரூ. 85 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

462. தங்கத் தேர் அலங்காரப் பணிகளுக்கான “தங்கத் தாள்” ஜப்பான் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது. 50 கிலோ எடையுள்ள பொன் மற்றும் வெள்ளி நிறத் தாள்கள் 06.05.2023 அன்று வந்து சேர்ந்தன.

463. இந்த ஆண்டுக்கான “விடுமுறை விவிலியப் பள்ளி” 08.05.2023 திங்கள் தொடங்கி 8 நாள்கள் தஸ்நேவிஸ் மாதா தொடக்கப் பள்ளியில் நடைபெற்றது. ஏறத்தாழ 100 குழந்தைகள் கலந்துகொண்டனர். நிறைவுவிழா 15.05.2023 திங்கள் காலையில் நடைபெற்றது. போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

464. உறுதிப்பூசுதல் பெறுவோருக்கான சிறப்புத் தியானம் 14.05.2023 ஞாயிறு காலை 10.30 முதல் 12.30 வரையும், பிற்பகல் 02.00 முதல் 04.00 வரையும் திருச்சிலுவை சிற்றாலயத்தில் நடைபெற்றது. வேதியர் சுதன்ராஜ் வழிநடத்திய இத்தியானத்தில் 80 இளையோர் கலந்துகொண்டனர்.

465. மாதா தொலைக்காட்சியில் 31.05.2023 அன்று ஒளிபரப்புவதற்கான செபமாலை வழிபாடு 15.05.2023 அன்று நமது பேராலயத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

466. **“குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்கான”** பனிமய நோன்பு வழிபாடு (31) 21.05.2023 அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட தம்பதியருக்காகப் பரிந்துரை மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

467. பேராலயப் பங்கு மற்றும் பிற பங்குகளைச் சேர்ந்த 80 இளையோருக்கு 28.05.2023 ஞாயிறு மாலை 05.00 மணித் திருப்பலியில் மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகையால் உறுதிப்பூசுதல் அருளடையாளம் வழங்கப்பட்டது.

பங்கில் நிகழ்ந்தவை

வரவேற்கிறோம்

I. திருமுழுக்கு பெற்றவர்கள்

எண்	குழந்தை	பெற்றோர்	திருமுழுக்கு நாள்	அன்பியம்
126.	அஸ்டாரா	அவினாஷ் - மேரி நிபா	30.04.2023	சூசையப்பர்
127.	ரிஹான் நத்தானியேல்	ராஜேஷ் - ரேச்சல்	27.05.2023	ஜூடு

வாழ்த்துகின்றோம்

2. புதுநன்மை பெற்றவர்கள்

எண்	பெயர்	பெற்றோர்	புதுநன்மை நாள்	அன்பியம்
144.	ஷிபோரா	பினிஸ்டன் - செல்வராணி	07.05.2023	வியாகுல மாதா
145.	ஜோனல்	ஆல்ட்ரின் - கலைவாணி	13.05.2023	கிறிஸ்தரசர்
146.	ஜோஸ்வா	ஆல்ட்ரின் - கலைவாணி	13.05.2023	கிறிஸ்தரசர்
147.	சகாய சியாஸ்டோ	அரிஸ்டோ - டெரன்சியா	13.05.2023	ஜூடு
148.	ஜோயல் ப்ரிட்னி	லசிங்டன் - ஜோமா	14.05.2023	ஜெபமாலை மாதா
149.	மரியானோ எட்ரிக்	ஷெர்லாக் - ஹெர்மின்ஷா	20.05.2023	மணல் மாதா
150.	மரிய எல்வின்	ஷெர்லாக் - ஹெர்மின்ஷா	20.05.2023	மணல் மாதா
151.	ஸ்னோஷான்	ஜானி - டயானா	27.05.2023	ஜூடு
152.	நோபல் அடிசன்	ஜானி - டயானா	27.05.2023	ஜூடு
153.	ஆர்லென் மச்சாது	ஆர்தர் மச்சாது - ரிக்டா மச்சாது	27.05.2023	மணல் மாதா
154.	ஜோனா மச்சாது	ஆர்தர் மச்சாது - ரிக்டா மச்சாது	27.05.2023	மணல் மாதா

ஆசி கூறுகின்றோம்

3. திருமணத்தில் இணைந்தவர்கள்

எண்	மணமக்கள்	அன்பியம்	திருமணநாள்
112.	வில்பின் - ஜெரோஷினி	சூசையப்பர்	10.05.2023
113.	ஆஷிக் சித்து - ஸ்டானி ராஃபியா	ஜெபமாலை மாதா	24.05.2023

செபிக்கின்றோம்

4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

எண்	பெயர்	உறவினர்	இறந்தநாள்	அன்பியம்
156.	ஏ.எம். சேவியர்	ஆரோக்கியம்மாள்	28.04.2023	தஸ்நேவிஸ் மாதா

நடைபெற இருப்பவை

★ 02.06.2023 தலை வெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 03.06.2023 முதல் சனி அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

★ 17.06.2023 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (32)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை "உயர் கல்வி பயில்வோருக்காக" நடைபெறும்.

திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

எண்	நாள்	கிழமை	செய்தியாளர்	செய்தித் தலைப்பு
130	06.06.2023	செவ்வாய்	அருள்பணி. ரெயோசில் பெப்பி	தூய ஆவியாரின் கொடைகள்
131.	13.06.2023	செவ்வாய்	அருள்பணி. இசிதோர்	தூய ஆவியாரின் கனி: அன்பு
132.	20.06.2023	செவ்வாய்	அருள்பணி. மகிழன்	தூய ஆவியாரின் கனி: அமைதி
133	27.06.2023	செவ்வாய்	அருள்பணி. அமலன்	தூய ஆவியாரின் கனி: பொறுமை
134	04.07.2023	செவ்வாய்	அருள்பணி. ரெயோசில் பெப்பி	தூய ஆவியாரின் கனி: தன்னடக்கம்

அன்புடன் வரவேற்கிறோம்

நமது பங்கில் புதிதாக இணைந்துள்ள பின்வரும் குடும்பங்களை வரவேற்கிறோம்.

எண்	தலைவர்	அன்பியம்	குடும்ப அட்டை எண்
64.	சகாயராஜ்	காவல்தூதர்	81
65.	நரேந்திரன்	பரிபூரணமாதா	58
66.	ஆக்னல் பர்னாந்து	தஸ்நேவிஸ் மாதா	24
67.	பாலு	சிந்தாத்திரை	92
68.	சகாயம்	பரிபூரணமாதா	59

அன்புடன் வழியனுப்புகிறோம்

நமது பங்கைவிட்டு வெளியேறிய பின்வரும் குடும்பங்களை வாழ்த்தி வழியனுப்புகிறோம்.

எண்	தலைவர்	அன்பியம்	குடும்ப அட்டை எண்
55.	வில்சன் ராஜா	திருச்சிலுவை	69
56.	ராஜேஸ்	அன்னை திரேசா	07
57.	அந்தோணி	சூசையப்பர்	06.
58.	ரொசாரி	கிறிஸ்தரசர்	33

விண்ணக வாழ்வின்
இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"ஆண்டவரே என் ஒளி; அவரே என் மீட்பு." (திபா 27:1)

பிறப்பு
06.12.1940

இறப்பு
05.07.2021

ச. பெல்லார்மின் பர்னாந்து

வயது : 82

நின் உருவம் எம் வழிகளிலும்
நின் குரல் எம் செவிகளிலும்
நிரந்தரமாய் தங்கியுள்ளன.
இறைவனிடம் எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

என்றும் உங்கள் அருமையுள்ள

மனைவி : **பெ. சகாயராணி**

மக்கள், மருமக்கள், பேத்திகள், பேரன்கள்
மற்றும்
உற்றார் உறவினர்கள்

No. 4, நாராயண சந்து, தூத்துக்குடி-1.

விண்ணக வாழ்வின்
100ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் இருந்து விண்ணிற்கு விரைந்த எம் இமைகளுக்கு
எங்கள் இதயத்தின் சமர்ப்பணம்

மண்ணில்
06.08.1950

விண்ணில்
18.02.2023

S. ஜோபாய் மச்சாது

எங்கள் தேடலின் சுகம் நீங்களே
எங்கள் கவிதையின் வரிகளும் நீங்களே
எங்களுக்குக் கிடைத்த வரமும் நீங்களே
நாங்கள் நேசிக்கும் எங்கள் உயிரும் நீங்களே

பாசத்தோடு நினைவுகூரும்

S. நட்சத்திரம்
F. கென்னடி
K. வினோத்
K. விஜய்

Stanis Art Work, 22, குருசடி சந்து, தூத்துக்குடி – 1,

நினைவு அஞ்சலி!

23ஆம் ஆண்டு நிறைவு

இரண்டாம் ஆண்டு நிறைவு

தோற்றம்
03.12.1952
மறைவு
27.02.2000



தோற்றம்
10.06.1956
மறைவு
21.06.2021

அலங்காரம் பர்னாந்து

மரிய கமலசீலி பர்னாந்து

என்றும் எங்கள் கண்களில்
கண்ணீரை காணவிரும்பாத நீங்கள்
இன்று கண்ணீரை மட்டும்
எம் கண்களுக்கு தந்துவிட்டு
இனியென்றும் நாங்கள் காணமுடியா
இடம்நோக்கி சென்றதும் ஏனோ?

இன்றும் இனியென்றும் உங்கள் நினைவுகளோடு

வாழும், வாடும் குடும்பத்தினர்

SHINY Ph : 98421 31493